செ.வெ.எண்.24-2019 நாள்.09.07.2019

# விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஜல் சக்தி அபியான் திட்டத்தின்கீழ் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்வளப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் விழிப்புணர்வு பேரணியை மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக இணை செயலாளர் திரு.சுரேந்தர் சிங்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

****

விழுப்புரம் மாவட்ட காவல்துறை அணிவகுப்பு மைதானத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஜல் சக்தி அபியான் திட்டத்தின்கீழ் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்வளப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் விழிப்புணர்வு பேரணியை மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக இணை செயலாளர் திரு.சுரேந்தர் சிங்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (09.07.2019) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

ஜல் சக்தி அபியான் நீர் வள பாதுகாப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பு பணிகளை மேற்கொண்டு வறட்சியில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திட மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ள இயக்கமாகும். பருவகாலம் தொடங்கப்படுவதற்கு முன் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. முதல் கட்டமாக ஜீலை 1ம் தேதி முதல் செப்டம்பர் 15ம் தேதி வரையும், அக்டோபர் 1ம் தேதி முதல் நவம்பர் 30ம் தேதி வரையும் செயல்படுத்தப்படும். இந்த இயக்கத்தில் நீர்வள பாதுகாப்பு பணிகள், தனிநபர் இல்லம், வியாபார தளங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு பணிகள், பாரம்பரிய நீர் நிலைகளான ஏரிகள், குளங்கள், குட்டைகள், வரத்து வாய்க்கால்கள் தூர்வாருதல் மற்றும் புணரமைத்தல் பணிகள், பயன்பாடற்ற ஆழ்துளை கிணறுகளில் மழை நீரினை சேகரிக்கும் பணிகள், பெருமளவு மரக்கன்றுகள் நடும் பணிகள், தனிநபர் இல்லங்கள் மற்றும் இதர பகுதிகளில் உபயோகப்படுத்தப்பட்டு வீனாக வெளியேற்றப்படும் நீரினை மறு சுழற்சி செய்தல், விவசாயத்திற்கு நீரினை சிக்கனமாக பயன்படுத்தும் சொட்டு நீர் பாசனம் போன்ற பணிகளை ஊக்குவித்தல், குறைந்த அளவு நீரை உறிஞ்சி வளரும் பயிர் வகைகளை பயிரிட விவசாயிகளை ஊக்குவித்தல், தனிநபர்கள் மற்றும் ஊராட்சிகளை உறிஞ்சி குழாய்கள் அமைக்கும் பணிகள் போன்றவை மேற்கொள்ளப்பட உள்ளது.

ஜல் சக்தி அபியான் திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இன்றைய தினம் விழிப்புணர்வு பேரணி ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது. இப்பேரணியில் மழைநீர் - உயிர்நீர், சிறுதுளி பெருவெள்ளம் என்பதை அறிவோம்,

சிந்தித்து அனைவரும் செயல்படுவோம், நீர்வளம் காப்போம், நிம்மதியாய் வாழ்வோம். நீர்த் தேக்கங்கள் கட்டுவோம். நீர்த்தாங்கிகள் உருவாக்குவோம். மரங்களை வளர்ப்போம், மழையைப் பெறுவோம், அறிவியல் துணை கொள்வோம், நீர் ஆளுமையைச் செய்திடுவோம், மழை நீரை சேமிப்போம், மண்ணுயிர் யாவும் காப்போம், மழை வளம் காப்போம், மண் வளம் காப்போம் போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகையை மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்த 1500-க்கும் மேற்பட்ட பெண்கள் ஏந்திச் சென்றனர். இப்பேரணி விழுப்புரம் மாவட்ட காவல்துறை அணிவகுப்பு மைதானத்தில் தொடங்கி விழுப்புரம் நான்கு முனை சந்திப்பில் சென்றடைந்தது.

இப்பேரணியில் மகளிர் திட்ட இயக்குநர் திரு.ஈஸ்வரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர்கள் திரு.சுந்தரேசன் (விழுப்புரம்), திரு.இராமகிருஷ்ணன் (கள்ளக்குறிச்சி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி.மஞ்சுளா, உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) திரு.ஜோதி (விழுப்புரம்), திருமதி.ரெத்தினமலா (கள்ளக்குறிச்சி), உதவி திட்ட அலுவலர்கள் திரு.ஆறுமுகம், திரு.சீனுவாசன், உதவி இயக்குநர்கள் (தணிக்கை) திரு.துரைசாமி (விழுப்புரம்), திரு.முத்தழகு (கள்ளக்குறிச்சி), உதவி செயற்பொறியாளர்கள் திரு.இளங்கோ, திரு.கண்ணாயிரம், திரு.ஜோதிவேலு, திரு.விவேகானந்தம், திரு.புஷ்பராஜ், திரு.சண்முகசுந்தரம், திரு.ராமலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.

செ.வெ.எண்.25/2019 நாள்: 09.07.2019

## பத்திரிக்கைசெய்தி

## ஜல் சக்தி அபியான்

விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் மத்திய அரசின் ஜல் சக்தி அபியான் திட்டத்தினை விழுப்புரம் மாவட்டம் முழுமைக்கும் நடைமுறைபடுத்துதல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில், மத்திய அரசின் சமூக நிதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக இணை செயலர் திரு.சுரேந்தர்சிங்,இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் ஜல் சக்தி அபியான் திட்ட செயல் விளக்க கருத்தரங்கம் நடைபெற்றது.

இத்திட்டமானது இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகவும், ஜல் சக்தி அபியான் திட்டத்தினை 2 கட்டங்களாக செயல்படுத்தப்படும் என்றும், முதல் கட்டம் – 1 ஜுலை 2019 முதல் 15 செப்டம்பர் 2019 வரை அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்திடவும், இரண்டாம் கட்டம் – 1 அக்டோபர் 2019 முதல் 30 நவம்பர் 2019 வரை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தமிழகமெங்கும் பல்வேறு பகுதிகளில் பருவ மழை பொய்த்தின் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளதால் வாழ்வாதரத்திற்கு தேவையான தண்ணீரை சேகரித்து நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்தும் பணி அவசியமாகிறது. அதன்படி அரசுக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், தடுப்பு அணைகள், அகழிகள், பண்ணைக் குட்டைகள் ஆகியவற்றை அமைத்தல், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுப் பணித் துறைக்கு சொந்தமான நீர்நிலைகளை புனரமைப்பு செய்தல், செயல்படாத ஆழ்துளைக் கிணறு/திறந்தவெளிகிணறுகளை மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளாக மாற்றுதல், தனி நபர் வீடுகளில் குளியலறை மற்றும் சமையலறையிலிருந்து வெளியேறும் நீரினை உறிஞ்சிக்குழி அமைத்து நீர் சேகரிப்பு செய்தல், பொது இடங்களில் சமுதாய உறிஞ்சிக் குழிகள் அமைத்து நீர் சேகரிப்பு செய்தல், ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை

திட்டத்தின்கீழ் கழிவு நீர் குட்டைகள், தீவிர காடு வளர்ப்பிற்காக மரக்கன்றுகள் நடுதல் ஆகிய பணிகள் இத்திட்டதின் காலவரையறைக்குள் செய்து முடித்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் அவர்களால் வகுக்கப்பட்டுள்ள திட்ட செயலாக்கம் குறித்த விவரங்களை கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

மத்திய அரசின் உன்னத திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டங்களை சீறிய முறையில் செயல்படுத்திட திட்டமிடல் பணி மிகவும் கவனத்துடன் செய்யப்பட வேண்டும் என்றும் அதன்படி நிர்ணயம் செய்யப்படும் இலக்கீடுகள் அதற்குரிய காலத்திற்குள் எய்திட துறை அலுவலர்கள் கடுமையாக பணியாற்றி விழுப்புரம் மாவட்டத்தில் இத்திட்டம் 100% வெற்றியடைய செய்ய வேண்டும் என்று மத்திய அரசின் சமூக நிதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக இணை செயலர் திரு.சுரேந்தர்சிங்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கருத்தரங்கில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திரு.ஈஸ்வரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர்கள் திரு.சுந்தரேசன் (விழுப்புரம்), திரு.ராமகிருஷ்ணன் (கள்ளக்குறிச்சி), தமிழ்நாடு தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி), உதவி இயக்குநர் நிலையிலான (ஊரக வளர்ச்சி) துறை அலுவலர்கள், மண்டல இயக்குநர், நகராட்சி, இணை இயக்குநர்(வேளாண்மை), இணை இயக்குநர்,(வேளாண்மை பொறியியல்) துறை, வனத் துறை மற்றும் உதவி செயற்பொறியாளர், பொது பணி துறை(நீர் வள ஆதார அமைப்பு), முதன்மை கல்வி அலுவலர், நகராட்சி ஆணையர்கள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அனைத்து செயல் அலுவலர்கள், பேரூராட்சிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
விழுப்புரம்.